<u>கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம் எண்.3 தாராபுரம்</u>

<u>மோட்டார் வாகன விபத்து உரிமைக்கோரிக்கை தீர்ப்பாயம், தாராபுரம்</u>

<u>அவ.எண். 231/15</u>

2018 ம் ஆண்டு 11.09.2018 பி.வாசா.2

சாட்சியின் சாட்சியம் திரு.பி.கருணாநிதி , பி.எ.பில்., கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி (மோ.வா.வி.உ.கோ.தீ) தாராபுரம் அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் ஜக்குபாய் | தொழில் |
| க /பெ சுப்பராயலு | கிராமம் |
| வயது | தாலுகா |
| ஜாதி | மாவட்டம் |
| சமயம் | |

<u>குறுக்கு விசாரணை பிவா 6 , 7 , 9 , 11 , 12 மற்றும் 15 தரப்பில்</u>

சத்தியமாக சொல்கிறேன். 1ம் பிரதிவாதி எனது கணவர் என்றாலும் நான் இந்த வழக்கில் 2ம் பிரதிவாதி என்றாலும் நான் 1ம் பிரதிவாதிக்கும் சேர்த்து சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரிதான். வாதி ஜெயக்குமார் எனது நாத்தனார்மகன் ஆவார். தாவா சொத்தில் பாகம் கேட்டு தான் வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் ன்றால் சரிதான். எனது மாமனார் பெயர் சடகோபால் நாயுடு என்றால் சரிதான். என் மாமனாருக்கு எனது கணவரும் வாதியின் தாயார் சுசீலாவும் 3ம் பிரதிவாதி கலாவதியும் வாரிசுதாரர்கள் ஆவார். தாவா சொத்தை பொறுத்து எனது கணவருக்கு (1ம் பிரதிவாதிக்கு) எனது மாமா கடந்த 22.2.1982ம் தேதி ஒரு பதிவு செய்யப்பட்ட உயில் எழுதி வைத்துள்ளார் . அந்த உயிலின் படி தாவா சொத்தில் ஒரு பகுதியை எனது கணவர் அடைந்து அனுபவித்து வந்து அவற்றில் சிலவற்றை மனையிடமாக பிரித்து 3ம் நபர்களுக்கு விற்பனை செய்துள்ளார் என்றால் சரிதான் .அதன்படி பிவா. 6 , 7 , 9 , 11 , 12 மற்றும் 15 ஆகியோர்களுக்கு எனது கணவர் கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். சுமார் 25 ஆண்டுகளுக்கு முன்பே மேற்படி நபர்கள் கிரையம் பெற்று வீடு மற்றும் கட்டிடம் கட்டி நகராட்சி வரி செலுத்தி அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரிதான். உயிலின் அடிப்படையில் தான் தாவா சொத்தின் ஒரு பகுதி என்கணவருக்கு பாத்தியப்பட்டு அவரிடமிருந்து மேற்சொன்ன பிரதிவாதிகள் கிரையம் பெற்றுள்ளார்கள் என்றால் சரிதான். மேற்சொன்ன பிரதிவாதிகளுக்கு விற்பனை செய்தது சரிதான் அதை அவர்கள் பெற்று அனுபவித்து வருவதும் சரிதான் அந்த சொத்துகளை பொறுத்து

பிரச்சனை ஏதும் இல்லை. மேற்சொன்ன பிரதிவாதிகள் கிரையம் பெற்ற சொத்துகளை பொறுத்து இந்த வாதிக்கும் 3ம் பிரதிவாதிக்கும் எந்த பாத்தியமும் இல்லை. மேற்சொன்ன பிரதிவாதிகள் கிரையம் பெற்ற சொத்துகளில் இந்த வாதிக்கோ 3ம் பிரதிவாதிக்கோ எந்த உரிமையும் ஏற்படவில்லை என்றால் சரிதான். எனது மாமனார் எனது கணவருக்கு எழுதி வைத்த உயிலில் அதில் கண்ட சொத்துகளுக்கு சரியாக செக்குபந்தி சொல்லி அடையாளம் காட்டி எழுதியுள்ளார் என்றால் சரிதான். மேற்சொன்ன பிரதிவாதிகள் கிரையம் பெற்ற சொத்துகளின் சர்வே எண்கள் தெரியுமா என்றால் நான் படிக்காததால் எனக்கு ஞாபகம் இல்லை. உயிலின் படி எனது கணவர் அடைந்த சொத்துகளில் மேற்சொன்ன பிரதிவாதிகளுக்கு கிரையம் கொடுத்த சொத்துகள் போக வேறு சொத்துகளும் உயில்படி எனது கணவருக்கு பாத்தியம் உள்ளது. எனது கணவர் மேற்சொன்ன பிரதிவாதிகளுக்கு கிரையம் கொடுத்த சொத்துகளில் இந்த வாதிக்கும் 3ம் பிரதிவாதிக்கும் எந்தபாத்தியமும் உரிமையும் இல்லை என்பதால் மேற்சொன்ன பிரதிவாதிகளை பொறுத்து வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரிதான்.